உதவி இயக்குநர் /உறுப்பினர் செயலர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.அ.விஜயன்,பி.இ.,

ந.க.எண்.1112/2021/மதி2. நாள்.12.10.2021.

பொருள் : அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவுகள் வரன்முறைப்படுத்துதல் விதிகள் 2017 - **மதுரை மாவட்டம் - மதுரை தெற்கு வட்டம் - விராதனூர் கிராமம் - சர்வே எண்கள்.263/2C2pt, 265/1B2pt,1B3, 1B4B,1B4C, 1B4E, 265/4, 265/5 -ல் 3.47 ஏக்கர்** பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான வரன்முறை ஒப்புதல் வழங்குதல்-தொடர்பாக.

பார்வை :

1) அரசாணை(நிலை) எண்-78,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)துறை, நாள்-04.05.2017.
2) அரசாணை(நிலை) எண்-172,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)துறை, நாள்-13.10.2017.
3) அரசாணை(நிலை) எண்-21,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)துறை, நாள்-05.02.2019.
4) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்-13193/2017/எல்ஏ2,நாள்- மற்றும் 28.03.2019.
5) **மனுதாரர் திரு.அ.முகமது யூசுப், மதுரை அவர்களின் விண்ணப்பம், நாள்.16.03.2021,** 06.07.2021,04.10.2021 **(பதிவு எண்.DTCP/L/0859742/2017.நாள்.16.02.2021**
6) அரசாணை எண்-100,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நவ4(3)துறை, நாள்- 01.07.2019.
7) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்-13379/2019/TCP-2, நாள்-27.11.2019.
8) அரசாணை எண். (நிலை) எண்.16, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் நவ(4)துறை, நாள்.25.01.2021.
9) உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் கடிதம் ந.க.எண்-1112/2021/மதி2, நாள்-19.08.2021.
10) **மனுதாரர் திரு.அ.முகமது யூசுப்,** மதுரை அவர்களின் கடிதம் நாள். 04.10.2021 (தானபத்திர எண்.9145/2021 நாள்-24.09.2021).

-----

**உத்தரவு :**

பார்வை(1),(2) மற்றும் (3)-ல் கண்ட அரசாணையின்படியும், பார்வை(4)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும், பார்வை(5)-ல் கண்ட கடிதங்களுடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு பார்வை(10)-ல் கண்ட மனுதாரரின் கடிதத்துடன் மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு (பூங்கா) பரப்பினை உறுப்பினர் செயலர், மதுரை உள்ளூர் திட்டக்குழும பெயரால் தானபத்திர மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டதினை தொடர்ந்து கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், விராதனூர் கிராமம், **சர்வே எண்கள்**.263/2C2pt, 265/1B2pt,1B3, 1B4B,1B4C, 1B4E, 265/4, 265/5 -ல் 3.47 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ.(R)/ம.உ.தி.கு எண்-40(R)/2021** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான வரன்முறை ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : 3.47 ஏக்கர் |
| மொத்த மனைகள் | : 96 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : 26 |

---2

192

விற்கப்பட்ட மனை எண்கள் :1,2,9,10,11,13,16,17,22-24,26-29,45-50,68,76,84,85,90

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : 61

விற்கப்படாத மனைகளின் எண்கள் :3-8,12,14,15,18-21,25,30-44,51-67,69,70,73-80,84A,85A-89,91.

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு : 6587.66ச.மீ

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு :

பூங்கா பரப்பு (மனை எண்கள் : 71,72,81-84A,91-93) : 682.47ச.மீ - 10.35%

<u>செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்</u>:

1) பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/-வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | 70 மனைகளுக்கு ரூ.35000/- இணையதளம் மூலம் கட்டப்பட்டு பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள மனைகளுக்கு பெறப்பட வேண்டும். விற்கப்பட்ட மனைகளுக்கு தனிமனை உரிமையாளர்களிடமிருந்து பெறப்படலாம். |

பரிசீலனைக்கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை பெற்றுக்கொண்டு வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

2) வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம்

| மனை எண்கள் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைபடுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 45 ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக்கட்டணம் (ஒரு சதுரமீட்டருக்கு 25 ரூபாய் வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1,2,3- 8,9,10,11,12, 13,14,15,16,17, 18-21,22-24,25,26-29,30-44,45- 50,51-67,68,69,70,73-80,76,84,84A,85A-89,85,90,91. | ------ | மனைகளின் அளவில் ஒரு சதுர மீட்டருக்கு 03.11.2019 -க்கு, பின்னர் ஒரு சதுர மீட்டருக்கு 45ரூபாய் வீதம் செலுத்தப்பட வேண்டும். (ஒவ்வொரு மனைக்கும்) | ஒரு சதுர மீட்டருக்கு 25ரூபாய் வீதம் செலுத்தப்பட வேண்டும். (ஒவ்வொரு மனைக்கும்) |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத்தலைப்பு

| | |
|---|---|
| 0217.Urban Development –60 Other Urban Development Scheme–800.Other receipts AT Receipts under Regularization charges of Unapproved layout and Plots – DTCP 27 Non Taxation Fees- 30 Regularization.(DPC 0217 60 800 AT 2730.) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக்கட்டணம் கீழ்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட உள்ளாட்சியால் மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

(192)

நிபந்தனைகள்:

1) அரசாணை எண்-172,வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்-13.10.2017-ல் விதி எண். 7(g)(ii)-ன்படி,மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.
2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு, ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான வரன்முறை ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
3) பார்வை(6)-ல் கண்ட அரசாணையின்படியும் மற்றும் பார்வை(7)-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களது கடித்தின்படியும், உறுப்பினர் செயலர், மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களுக்கு மனுதாரர் மூலம் மனைப்பிரிவு சாலைகள மற்றும் பொது ஒதுக்கீடு (பூங்கா) பரப்பினை தானபத்திர எண். 9145/2021 நாள்-24.09.2021-ன் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பார்வை 6-ல் கண்ட அரசாணைப்படி இப்பொதுஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு உறுப்பினர் செயலரால் ஒப்படைக்கப்படும்.
4) தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு (பூங்கா) அளவுகளில் வேறுபாடு இருப்பின் முழுப் பொறுப்பும் மனுதாரரையே சாரும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

12/10/21

உதவி இயக்குநர் /உறுப்பினர் செயலர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மதுரை மாவட்டம்.

12/10/21

**இணைப்பு :**

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.
(ஒரு வரைபடம் மனுதாரருக்கு உள்ளாட்சி மூலமாக)

பெறுநர் :

**வட்டார வளர்ச்சி அலுவலர்,**
திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம்,
**மதுரை மாவட்டம்.**

நகல் : **(வரைபடத்துடன்)**

| | |
|---|---|
| 1) உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, மதுரை மாவட்டம். | உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு |
| 2) சார்பதிவாளர், 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் மதுரை தெற்கு, மதுரை மாவட்டம். | உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம் ஒரு தொகுப்பு |

3) தொழில் நுட்ப வைப்பறை - 1வரைபடம்.

4)தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம், **(TNRERA)**
1A, முதல் தளம், காந்தி இர்வின் பிரிட்ஜ் சாலை, சென்னை -600008

5) **மனுதாரர் (உத்திரவு மட்டும்)**

**திரு.அ.முகமது யூசுப்,**
**எண்.8/1, அன்சாரி நகர்,**
**மகபூப்பாளையம்**
**மதுரை -10.**

**திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை:-திரு.சி.பிரேமராஜன்.,**

**ந.க.எண்: 3855/2021/தி3** நாள்: .11.2021

பொருள்: அனுமதியற்ற தனிமனை வரன்முறைப்படுத்துதல்- திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் - **விராதனூர் ஊராட்சி விராதனூர் கிராமம் - சர்வே எண்**.263/2C2pt. 265/1B2pt. 1B4B, 1B4C, 1B4E, 265/4, 265/5 -ல்,கட்டுப்பட்ட **மனைப்பரப்பு-3.47 ஏக்கர் ஐ வரன்முறைப்படுத்தி உத்தரவிடல் -** தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்: 255 ஊரக வளர்ச்சி(C2)த் துறை நாள்: 18.08.1997.
2. அரசாணை (நிலை) எண்: 71 ஊரக வளர்ச்சி (C2)த் துறை நாள்: 16.06.2003.
3. அரசாணை (நிலை) எண்: 78 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த்துறை நாள்: 04.05.2017.
4. அரசாணை (நிலை) எண்: 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த்துறை, நாள்:13.10.2017.
5. மனுதாரர் திரு.A.முகமது யூசுப், 8/1-அன்சாரி நகர், மகபூப்பபாளையம், மதுரை-10 அவர்களின் விண்ணப்பம் நாள்: 01.11.2021.
6. உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண்: 1112/2021/மதி2, நாள்: 12.10.2021.
7. திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)அவர்களின் ந.க.எண்: 3855/2021/தி3, நாள்: 11.2021.
8. மனுதாரர் திரு.A.முகமது யூசுப், 8/1-அன்சாரி நகர், மகபூப்பபாளையம், மதுரை-10 என்பவரின் வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் செலுத்தியதற்கான வங்கி வரைவோலை மற்றும் ரசீது.

**உத்தரவு:-**

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், **விராதனூர் ஊராட்சி, விராதனூர் கிராமம் சர்வே எண்.** .263/2C2pt, 265/1B2pt, 1B4B, 1B4C, 1B4E, 265/4, 265/5 **-ல்,** கட்டுப்பட்ட மனைப்பரப்பு-3.47 ஏக்கர்-ஐ நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சி அளவிலேயே வரன்முறைப்படுத்தி உரிய உத்தரவு வழங்கிட பார்வை 6-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மனுதாரர் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை பார்வை 7-ல் காணும் கடிதம் வாயிலாக செலுத்த தெரிவித்ததைத் தொடர்ந்து பார்வை 8-ல் காணும் விபரப்படி கீழ்கண்டவாறு செலுத்தியுள்ளார்.

வரன்முறை கட்டணம்: அரசு கருவூலக E-Challan எண். 20211103741104, நாள்: 03.11.2021, மூலம் ரூ.265770/-(ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து எழுநூற்று எழுபது மட்டும்) சார்நிலை கருவூலகம் மதுரை தெற்கு அலுவலகத்தில் இணையதளத்தில் மனுதாரால் செலுத்தப்பட்டுள்ளது.

மேம்பாட்டுக் கட்டணம்: வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), திருப்பரங்குன்றம் என்ற பெயரில் **Canara Bank,** மதுரை சென்ரல் கிளை, வங்கி வரைவோலை எண்: 858738, நாள்: 02.11.2021, ரூ.147650/- (ரூபாய். ஒரு இலட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) மனுதாரால் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 3 மற்றும் 4ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட விராதனூர் ஊராட்சி விராதனூர் கிராமம், சர்வே எண். 263/2C2pt, 265/1B2pt, 1B4B, 1B4C, 1B4E, 265/4, 265/5 -ல்,கட்டுப்பட்ட மனைப்பரப்பு-3.47 ஏக்கர் ஐ கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

**மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்படும் விபரம்**

| வ. எண் | மனை எண். | பரப்பளவு சதுர மீட்டர் |
|---|---|---|
| 1. | 3.47 ஏக்கர் | 5906.00ச.மீ |

**நிபந்தனைகள்**

1. அரசாணைகளுக்கு உட்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு கட்டுப்பட்டு இந்த தற்காலிக உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

2. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிபடுத்தவில்லை, கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நிலஉரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின் படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை பரிமாற விரம்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்துகொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம். நில உரிமை குறித்து முடிவு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

3. தனிமனை அளவுகள், புல எண்கள் மற்றும் உத்தேச சாலை அமைப்புகள் ஆகியவற்றை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆய்வின் போது காட்டப்பட்டதில் மாற்றம் ஏதும் இருப்பின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் படி தங்கள் மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

4. இந்த தனிமனை அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச்சட்டம் மற்றும் நில சீர்திருத்தச்சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை என தங்களால் உறுதி மொழி சான்று வழங்கப்பட வேண்டும்.

(196)

5. கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மனையின் பரப்பளவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் பரப்பளவு இருப்பது பின்னர் தெரியவந்தால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன்படி தங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

6. பெறப்பட்ட ஆவணங்களின்படி தயார் செய்யப்பட்ட வரைபடத்திற்கு உள்ளாட்சி விதிகளின்படி உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

7. தனிமனை சாலைகள் அனைத்தும் கொள்கையளவிலான மனைப்பிரிவு வரன்முறை வரைபடத்தின்படி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன்படி பத்திரபதிவு துறையில் **விராதனூர் ஊராட்சி** என உள்ளாட்சியின் அபிவிரத்திக்கு பதிவு செய்து தரவேண்டும்.

8. இந்த தனிமனை உள்ளூர் திட்டக் குழுமத்தால் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கட்டிட வரைபட அனுமதி பின்பு தனியாக ஊராட்சியில் விண்ணப்பித்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

9. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிரத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டது கண்டிறியபட்டால் திட்ட அனுமதி இரத்து செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையால் உரிய சட்டரீதியான நடவடிக்கை தங்கள் மீது எடுக்கப்படும்.

10. கட்டிடத்தை சுற்றியுள்ள காலியிடத்தில் மரக்கன்றுகள் நடப்பட வேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
திருப்பரங்குன்றம்

**பெறுநர்**

திரு.A.முகமது யூசுப்,
8/1-அன்சாரி நகர்,
மகபூப்பபாளையம்,
மதுரை-10.

**நகல்**

1. ஊராட்சி மன்றத்தலைவர், விராதனூர் ஊராட்சி.
2. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம் - III
   ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருப்பரங்குன்றம்.

**நகல் பணிந்து அனுப்பப்படுகிறது:-**

1. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், மதுரை - 625 020.
2. உறுப்பினர் செயலர்(பொ),உள்ளூர் திட்டக்குழுமம், மாநகராட்சி அலுவலகம், அண்ணா மாளிகை, மதுரை 625 002.
3. சார்பதிவாளர், பத்திர பதிவுத்துறை அலுவலகம், திருப்பரங்குன்றம், மதுரை.
4. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் ஆவணங்கள் துறை, மதுரை